செ.மு.எண்: 583 நாள்: 14.11.2017

## காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியரின் செய்திக்குறிப்பு

## மாவட்ட ஆட்சியர் அவர்கள் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பது.

### பழங்குடியின விவசாயிகள் இலவச மின்னிணைப்பு பெற ஆன்லைனில் விண்ணப்பங்கள் கோரப்படுகிறது.

தாட்கோ மூலம் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த விவசாயிகளுக்காக செயல்படுத்தப்படும் துரித மின் இணைப்பு வழங்கும் (Fast Track Power Supply ) திட்டத்திற்கு ஆன்லைன் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

விண்ணப்பதாரர் பழங்குடியின விவசாயியாக இருக்க வேண்டும். குடும்ப ஆண்டு வருமானம் ரூ.1.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். நிலம் விண்ணப்பதாரருக்குச் சொந்தமாக இருப்பதுடன் அவரது பெயரில் நிலப்பட்டா இருக்க வேண்டும். மேற்கண்ட நிலத்தில் கிணறு அல்லது ஆழ்குழாய் கிணறு அமைக்கப்பட்டிருக்க வேண்டும். தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் மின் இணைப்பு கோரி விண்ணப்பித்திருக்க வேண்டும்.

இத்திட்டம் குறித்த விபரங்களை தாட்கோ இணையதள முகவரி http://fast.tahdco.com யில் அறிந்து கொள்ளலாம்.

மேற்கண்ட திட்டத்தில் பயன்பெற விரும்புவோர் http://fast.tahdco.com என்ற இணையதள முகவரியில் விண்ணபத்தினை ஆன்லைனில் பதிவு செய்ய வேண்டும். பதிவு செய்யும் பொது விண்ணப்பதாரர் பற்றிய விவரங்களுடன் சாதி சான்று, குடும்ப அட்டை அல்லது இருப்பிட சான்று, கல்வித் தகுதி மற்றும் வயதிற்கான ஆதார சான்றிற்கு (பள்ளி மாற்றுச் சான்று / வாக்காளர் அட்டை / பா்ன் கார்டு / ஆதார் அட்டை / மதிப்பெண் சான்று) இவற்றில் ஏதாவது ஒன்றை அதற்கான இடத்தில் குறிப்பிட்டு விண்ணப்பதாரருக்குச் சொந்தமாக இருக்கும் நிலப்பட்டா மற்றும் சிட்ட அடங்கள் நகல், "அ" பதிவேடு நகல், நிலத்தில் கிணறு அல்லது ஆழ்குழாய் கிணறு அமைக்கப்பட்டதற்கான நிலத்தின் வரைபடம், சர்வே எண்., மின் வாரியத்தில் பதிவு செய்த இரசீது நகல், கிணறு அமையப்பெற்றுள்ள கிராமம், மோட்டார் குதிரை திறன், சம்மந்தப்பட்ட மின் வாரிய கோட்டம் ஆகிய விபரங்களுடன் புகைப்படத்தையும் ஸ்கேன் செய்து பதிவேற்றம் செய்ய வேண்டும்.

ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்க உதவி தேவைப்படுவர்களின் வசதிக்காக அனைத்து தாட்கோ, மாவட்ட மேலாளர் அலுவலகங்களிலும் ரூ.20/– செலுத்தி விண்ணப்பிக்கும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது என காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

10/11

மாவட்ட ஆட்சித் தலைவர்,
காஞ்சிபுரம் மாவட்டம்

2/2

8/11/17

8-11-2017